பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
PHYSICS
நிலை மின்னியல்
ஆசிரியர்:
திரு. வர்ணம்
ஆரம்பம்;
03-09-1988
Sat – 2.30 p.m.

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
ZOOLOGY
Sat & Sun – 8.30 a.m.
விலங்குப்பாகுபாட்டியல்
Sat. & Sun. 11-30 a. m
சிறுநீர் சனனித் தொகுதி
ஆசிரியர்:
திரு. நாகநாதன்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆவணி ௴ 22 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 முஹர்ரம் பிறை 24 (07 - 09 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 177

# முதலில் யுத்தநிறுத்தம், அமைதி; பின்பே தேர்தலைச் சிந்தியுங்கள்

## இந்தியத் தூதுவர் டிக்ஸிற்றிடம் கூட்டணியினர் திங்களன்று வற்புறுத்து

— கொழும்பிலிருந்து உதயன் சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, செப்டம்பர் 07

யுத்த நிறுத்தத்தை முதலில் பிரகடனப்படுத்தி அமைதியை உடனே ஏற்படுத்த வேண்டும். அதன் பின்பே தேர்தல் குறித்துச் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு, இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றிடம் கடந்த திங்கட்கிழமை வலியுறுத்தியது.

திரு. டிக்ஸிற்றுக்கும் கூட்டணித் தூதுக்குழுவுக்கும் இடையில் கொழும்பில் சுமார் ஒன்றரை மணிநேரம் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இப்போதைய சூழ்நிலையில் இந்திய அரசின் நிலைப்பாடு, அது கவனம் செலுத்திவரும் விடயங்கள் என்பன குறித்து திரு டிக்ஸிற் எடுத்துக் கூறினார் எனவும் அறியப்படுகிறது.

பேச்சுக்களில் கலந்து கொண்ட கூட்டணித் தூதுக்குழுவில் இடம் பெற்றவர்கள் வருமாறு:-

திரு. அ. அமிர்தலிங்கம் (செயலதிபர்), திரு எம். சிவசிதம்பரம் (தலைவர்), திரு. இரா சம்பந்தன், திரு வெ. யோகேஸ்வரன், டாக்டர் நீலன் திருச்செல்வம், திரு. பி. எஸ். சூசைதாஸன்.

பேச்சுக்கள் குறித்து திரு. அமிர்தலிங்கம் உதயன் செய்தியாளரிடம் சொன்னதாவது:-

பேச்சுக்களின்போது நாம் பேசியது குறைவு. திரு டிக்ஸிற் சொன்னவற்றைக் கேட்பதில் தான் நாம் கூடுதல் நேரத்தைச் செலவிட்டோம்.

புதுடில்லியில் நடந்த பேச்சுக்கள், கொழும்பு திரும்பி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன நடத்திய பேச்சுக்கள், வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் திரு. ஜெயவர்த்தனா நிறைவேற்ற வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு கோட்டை

## ரயில் நிலையத்தருகே குண்டு வெடித்து 5 பேர் பலி

கொழும்பு, செப் 7

கொழும்பு, கோட்டை ரயில்வே நிலையத்துக்கு முன்னால் உள்ள ஹோட்டல் ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் ஐந்து பேர் உயிரிழந்தனர். 40 பேர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் நேற்று மாலை 6 45 மணியளவில் இடம் பெற்றது.

மல்வத்தை வீதியில் உள்ள ஹோட்டலில் மேசை ஒன்றில் பார்சல் ஒன்றை நபர் ஒருவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், செப்.7

அமைதிப்படையினரின் வாகனத்தை நோக்கி கிரனேட் ஒன்று வீசப்பட்டதாயினும் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

நேற்றுக் காலை பத்து மணி அளவில் யாழ்ப்பாணம் அடைக்கலமாதா கோவிலுக்கு அருகாமையில் ஆஸ்பத்திரி வீதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

கிரனேட் வீசப்பட்டதை அடுத்து அடைக்கலமாதா கோவிலுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வயலில் கிடந்த ஷெல் வெடித்தது!

### ஒருவர் பலி; மற்றவர் காயம்

யாழ்ப்பாணம், செப் 7

வயலில் அரைகுறையாகப் புதையுண்டிருந்த ஷெல் ஒன்றை எடுத்து அதனை உராய்ந்துபார்த்தவர் அது வெடித்ததில் அந்த இடத்திலேயே மரணமானார்.

மற்றும் ஒருவர் பலத்த காயத்துக்கு இலக்கானார்.

நேற்று நண்பகல் 12 மணி அளவில் இருபாலை மடத்தடிப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த சிலர் அங்கிருந்த பற்றை ஒன்றுக்குள் ஷெல் குண்டு ஒன்று அனாதரவாகக் கிடப்பதைக் கண்டனர்.

சுப்பு திருச்செல்வம் (வயது 26) என்பவர் அந்த ஷெல் குண்டினை எடுத்து நிலத்தில் உரசிப் பார்த்தார். அது பயங்கரமாக வெடித்தது.

இதில் சுப்பு - திருச்செல்வம் (வயது 26) உடல் சிதறிய நிலையில் அந்த இடத்திலேயே மரணமானார்.

ஐயாத்துரை சேகர் (வயது 22) என்பவர் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-9-10)

## பிரதமர் ராஜீவின் வீட்டிற்கு மேல் விமானம் பறக்கத் தடை!

புதுடில்லி, செப். 7

பிரதமர் ராஜீவ் காந்தியின் வீட்டுக்கு மேலால் விமானம் பறக்கத் தடைவிதிக்கப்பட்டு உள்ளது.

புதுடில்லியில் ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள 7 ஆம் நம்பர் வீட்டில் பிரதமர் வசித்துவருகிறார்.

அந்த வீட்டுக்கு மேலால் விமானங்கள் பறக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களைமுன்னிட்டு இத்தடை விதிக்கப்பட வேண்டும் என்று உள்துறை அமைச்சு வலியுறுத்தியதைத் தொடர்ந்தே இப்புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பிரதமரின் வீடு உள்நாட்டு, வெளிநாட்டு விமானங்கள் செல்லும் ஆகாய

(6-ஆம் பக்கம் பார்க்க)

பூஸா முகாமிலிருந்து

## விடுதலையான இருவர் யாழ் வந்தனர்

யாழ்ப்பாணம், செப் 7

பூஸா தடுப்பு முகாமில இருந்து நோயாளிகள் என்ற காரணம் காட்டி நேற்று முன்தினம் இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்க்கவென இங்கிருந்து வடக்கு—கிழக்கு பிரசைகள் குழுவின் இணைப்புக் குழுவினரால் அழைத்துச் செல்லப்பட்டவர்களிடமே இந்த இருவரும் விடுதலை செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைசெய்யப்பட்ட இருவரின் பெயர்களும் வருமாறு:- சின்னுகிருஷ்ணன், குருநகர் இவர் இருதய நோயாளி ஆவார். சற்குணராசா நயினதீவு இவர் மன நோயாளி ஆவார்.

இந்த இருவரும் பூஸா சென்ற குழுவினருடன் நேற்று யாழ்நகர் திரும்பியிருந்தனர்.

இவர்கள் இருவரையும் இன்று யாழ் சென்னையர் முன்னணியினர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ 10-9)

## மாலை வேளையில் வெடித்த கிரனேட்

யாழ்ப்பாணம், செப் 7

நல்லூருக்குச் சமீபமாக நேற்றுமாலை சுமார் 6-20 மணிக்கு கிரனேட் ஒன்று வெடித்தது.

அதன்காரணமாக நல்லூர்ப்பகுதியில் பதற்றம் நிலவியது.

நல்லூர் நாவலர்வீதிக்கும் குறுக்குத் தெருவுக்கும் இடையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

சம்பவம்பற்றிய மேல் விவரம் எதுவும் செய்தி எழுதப்படும் வரை தெரியவரவில்லை.

இப்பகுதியைச் சுற்றி வளைத்த படையினர் சிலரை முகாமுக்கு அழைத்துச் சென்றதாகக் கூறப்பட்டது. (ஒ-10)

## சென்னையில் பத்திரிகையாளர் ஆர்ப்பாட்டம்

சென்னை, செப் 7

சென்னையில் நேற்று நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்,

பத்திரிகை அவதூறுச் சட்டத்துக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்தியா முழுவதிலும் உள்ள பத்திரிகையாளர் நேற்று வேலைநிறுத்தம் செய்ததால் இன்றுபத்திரிகைகள் வெளிவரா என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## முச்சந்தி முரளி



கண்ட கண்ட சாமான்களையும் எடுக்கிற பழக்கத்தை எங்கடை ஆக்கள் கைவிட வேணும். இல்லாவிட்டால் அநாவசியச் சாவுகள்தான்...!

## சுபநேரம்

07 – 09 – 88
ஆவணி – 22
புதன்கிழமை
சுபநேரம்:
04.34 முதல் 06.04வரை
ராகுகாலம்:
12.04 முதல் 01.34வரை

## பூஸா சென்ற குழு யாழ் திரும்பியது!

யாழ்ப்பாணம் செப் 7

ஞாயிற்றுக்கிழமை பூஸா சென்ற முதலாவது குழு நேற்று யாழ்ப்பாணம் திரும்பியது.

திங்கட்கிழமை பூஸா சென்ற இக் குழுவினர் காலை பத்து மணி முதல் மாலை நான்குமணி வரை தடுப்புக் காவலில் உள்ளவர்களைச் சந்தித்து உரையாடினர்.

இவர்களுடன் பூஸாவுக்கு சென்ற ஏற்கனவே பூஸாவில் இருந்து விடுதலையான கரவெட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இது தொடர்பாக தகவல் தருகையில் கூறியதாவது:-

பூஸா முகாமில் உள்ள இளைஞர்கள் இங்கு நடைபெறும் தமது விடுதலை பற்றிய போராட்டங்களை அறிந்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

பிரஸ்தாப கைதிகளு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் நடவடிக்கை: நிறுத்தக் கோரிக்கை

### பிரதமர் ராஜீவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், செப்.7

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தியஇராணுவத்தினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

அங்கு சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்தி எமது பகுதி மக்கள் உயிருடன் இருக்கின்றனரா என்பதையும் அறியத் தாருங்கள்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த துணுக்காய் -பாண்டியன்குளம் பிரசைகள் குழுவினர் இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் தேடுதல் நடவடிக்கைகள் குறித்தும் — அதனால் ஏற்பட்ட அழிவுகள்குறித்தும் அந்தக் கடிதத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின்

(6 ஆம பக்கம் பார்க்க)

## நிர்ணயவிலைக்கு எரிபொருள் வாங்க அமைதிப்படை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 7

எரிபொருள்களை அவற்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகளைக் கொடுத்து வாங்கும்படியும், அப்படி வாங்குவதில் கஷ்டம் இருப்பின் அமைதிப் படையினருக்கு முறையிடும்படியும் பாவனையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக அமைதிப் படையின் யாழ் நகர கொமாண்டர் தலைமையகத்தில் இருந்து விடுக்கப்பட்ட பத்திரிகைக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் உண்ணாவிரதம்

பூஸா தடுப்பு முகாமில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலை கோரி நேற்றும் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் வடமராட்சி பிரசைகள் குழுவினர், ஈழவர் முன்னணியினர், சங்கானை, சோன்டாவில்முல்லைத்தீவுபகுதி பிரசைகள் குழு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஒ-9)

## 10 ஆயிரம் மாணவர்கள் பேரணி

கைது செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளை விடுதலை செய்யக் கோரி புதுக்கோட்டையில் 10 ஆயிரம் மாணவ, மாணவிகள் பேரணி நடத்தினர்.

ராஜீவ்- ஜெயவர்த்தனா நகல் ஒப்பந்தத்தை மாணவர்கள் எரித்தனர். (ஒ-எ)

நல்லூர் உற்சவம்:

## ஊரடங்கு 1மணி நேரம் தளர்வு

யாழ்ப்பாணம், செப் 7

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் உற்சவத்தை முன்னிட்டு, நல்லூர்க் கோயிலை அண்டியுள்ள பிரதேசங்களில் ஊரடங்கு உத்தரவு இன்று (7-9-88) முதல் அதிகாலை நான்கு மணிக்குத் தளர்த்தப்படும்.

ஏனைய பகுதிகளில் வழமைபோல்காலை 5 00 மணிக்கே ஊரடங்குஉத்தரவு தளர்த்தப்படும்.

நல்லூர்க் கோயிலை அண்டியுள்ள பிரதேசங்கள் உட்பட சகல பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு வழமைபோல் மீண்டும் மாலை ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும்.

யாழ் நகரக்கொமாண்டர் அலுவலகம் நேற்று இதனை அறிவித்தது. (ஒ-ஐ)

## ஜீ. சீ. ஈ. பரீட்சை முடிவு மாத இறுதியில்?

ஜீ. சி. ஈ. சாதாரண தர விசேட பரீட்சையின் முடிவுகள் இம்மாத கடைசியில், அல்லது அடுத்த மாத முற்பகுதியில் வெளி வரலாம் என நம்பப்படுகிறது. (ஒ-9)

## பூஸாவுக்குச் செல்வோர் பெயர்களைப் பதியலாம்

யாழ்ப்பாணம், செப்.7

பூஸா முகாமிலுள்ள கைதிகளைப் பார்வையிட விரும்பும் பெற்றோர் தங்கள் பெயர்களை நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் பதிவு செய்ய முடியும்.

இந்தத் தகவலை வடக்குக் கிழக்குப் பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழுவும், யாழ் அன்னையர் முன்னணியினரும் தெரிவித்துள்ளனர். (ஒ-9)

## பரு-கொழும்பு பஸ் சேவை இன்று ஆரம்பம்

வடமராட்சி, செப் 7

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை சாலையும் இன்று பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கான பஸ்சேவையொன்றை ஆரம்பிக்கிறது.

இன்று காலை 6-30மணிக்கு வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு எஸ். கனகரத்தினம் இச்சேவையை ஆரம்பித்து வைக்கிறார். (ஒ-160)

மினிபஸ் விபத்து:

## மாணவி மரணம்

யாழ்ப்பாணம், செப்.7

மினிபஸ் விபத்தில் சிக்கிய மாணவி ஒருவர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கோப்பாயைச் சேர்ந்த இராசலிங்கம் கிரிசாந்தி (வயது 16) என்ற மாணவியே இவ்வாறு மரணமானவராவர்

கடந்த திங்கட்கிழமை இவர் கோப்பாய்ப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சைக்கிளில் வந்துகொண்டிருந்தபொழுது இருபாலையில் மினிபஸ் விபத்தில் சிக்கினார்.

எனினும் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று மரணமானார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ். பதில் நீதிவான் திரு. ஏ. அன்ரனி நடத்தினார்.

(முன்னர் வந்த செய்தி 2 ஆம் பக்கத்தில்) (ஒ-10-72)

## அமைதிப்படை வாகனங்கள் விபத்தில்

யாழ்ப்பாணம், செப் 7

இந்திய அமைதிப் படையினரின் இரண்டு வாகனங்கள் நேற்று மானிப்பாய்க்கு அண்மையில் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இதன் காரணமாக பொதுமக்களில் ஒருவரும் படையினர் சிலரும் காயமடைந்ததாகத் தெரியவந்துள்ளது.

நேற்றுமாலை மானிப்பாய்-சங்கானை வீதியில் பிப்பிலி மயானத்துக்கு அண்மையில் இச் சம்பவம் நடைபெற்றது. (ஒ-10)

## இரட்டை இலைச் சின்னம் யாருக்கு

சென்னை செப 7

இரட்டை இலைத் தேர்தல் சின்னத்தை ஜானகி அணிக்கு வழங்கும்படி ஜெயலலிதா அணியில் இருந்து வெளியேறிய நாவலர் அணி கோரியுள்ளது.

இது சம்பந்தமான மனு ஒன்றை நாவலர் அணியின் சார்பில் முன்னாள் அமைச்சர் திரு. திருநாவுக்கரசு நேற்று புதுடில்லியில் தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பித்தார். (ஒ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★சின்னஞ் சிறு விளம்பரம்★

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் அலுமாரி கட்டில் மெத்தை Vono Spring கட்டில், கண்ணுடி மேசைகள், கடைச் சோக்கேஸ், சாப்பாட்டு மேசைகள், Show Case, காரியாலய மேசைகள், மற்றும் பித்தளை கிளாஸ் வகைகள் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தியருகில். (6103)

41ஸ்ரீ இசுசு லொறிக்குரிய கியர்பொக்ஸ் எஞ்சின் மெயின் அக்சில், செல் முதலியன விற்பனைக்கு உண்டு. முகவரி இல: 7 சீ. பீச் லேன், கொழும்பு - 11, (புறக்கோட்டை மத்திய சந்தைக்கு அருகில்) (6249)

புதிய Honda Reconditioned, புதிய, பழைய Model C 90, C 50, CD 90, CD 50, MD 90, Charly மோட்டார்சைக்கிள்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. No. 16, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (A. G. A அலுவலகம் முன்பாக) (6146)

நீராவியடியில் உள்ள அரைக்கும் ஆலை (Grinding Mill) விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்:-29, நீராவியடி, யாழ்ப்பாணம். (6149)

### காணி விற்பனைக்கு

இளவாலையில் பிரதான வீதியில் அக்கத்தனை என்னுமிடத்தில் 3¾ நிலப்பரப்பு உள்ளது. (மூப்பர் ஆச்சியின் காணி) தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: A. J. சவுந்தரநாயகம், (சந்திரன்) கல்லூரி வீதி, இளவாலை. (6150)

## தேவை

புலோலி ப. நோ. கூ. சங்க பேக்கரியில் பாண், பணிஸ், பிஸ்கட் ஆகிய பொருள்கள் உற்பத்தி செய்ய மூவர் (03) தேவைப்படுகின்றனர். உடனடியாக விண்ணப்பித்து எம்முடன் தொடர்பு கொள்ளவும். பொது முகாமையாளர், புலோலி ப. நோ. கூ. சங்கம் புலோலிகிழக்கு, பருத்தித்துறை (C/125)

சண்டிலிப்பாயில் இயங்கும் தையல் நிலையத்திற்கு தையல் வேலை, தெரிந்த பெண்பிள்ளைகளும், பூ வேலையில் அனுபவமுள்ள பெண்களும் உடன் தேவை, தொடர்பு சு. வெங்கடேஸன், C/o கு விஞேதன் 'அகில் காமன்ஸ்' உத்தமிஇல்லம், கல்வளை சண்டிலிப்பாய், (6247)

விரைவில் ஆரம்பிக்க இருக்கும் லேடீஸ் கார்மென்ற்இன்டஸ்றீஸுக்கு கைதேர்ந்த சட்டரும், பெண் தையலர்களும் தேவை. மானிப்பாய் பகுதியினருக்கு முன்னுரிமை தரப்படும். விண்ணப்பிக்கவும். 'ஜெசபதி காம் ரெக்ஸ்' மானிப்பாய். (6154)

ஆங்கிலம் எழுதக, வாசிக்கத் தெரிந்த காசாளர் தேவை. றேடியோ, ரி. வி திருத்துவதில் அனுபவம் உள்ளவர் தேவை. 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (6359)

## DIPLOMA IN NURSING

தாதியர் பயிற்சி இரண்டாம் பிரிவு: தாதியர் பயிற்சி நெறி செப்டம்பர் 12 ஆம் திகதி ஆரம்பம். தகுதி வாய்ந்த டாக்டர்களினுல் நடாத்தப் படுகிறது. விபரங்கட்கு; ஜேயல் ரியூட்டறி மானிப்பாய், நவீன வைத்தியசாலை 1ஆம் கட்டையடி. உடுவில் (6139)

### புதிய வகுப்புகள்

G. C. E. (A/L) 89 One year Course விஞ்ஞான பாடங்கள் மட்டும் ஆரம்பம். 09-09-88 காலை 8 மணி Science Centre, Karaveddy, (6250)

### வைத்தியம்

01 - 09 - 88 தொடக்கம் 38, பாங்சால் வீதி, (பள்ளிவாசலிற்கு அருகில்) யாழ்ப்பாணம், சர்மரோக வைத்தியசாலை ஒன்று ஆரம்பமாகி உள்ளதை அறியத் தருகின்றேம் அரியாலை நெடுங்குளம் வீதியில் இயங்கி வந்த நசனல் டிஸ்பென்சரியும் மேற்படி முகவரியில் இயங்குகின்றது என்பதனையும் அறியத்தருகின்றேம். பரம்பரை வைத்திய முறைப்படி சிகிச்சை அளிக்கப்படும். Dr. S. Subasharan. (6357)

### அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரஜைகள் குழு தற்போது இயங்கவில்லை என்பதை இத்தால் அறியத்தருகிறேம். ச. நல்லநாதன். (செயலாளர்), தலைவர் S. A. Manuvetpillai. (6356)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள். Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hyline சறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19. முருகேசர்லேன், நல்லூர். (6143)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C/109)

## சேவை

தரமான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கு (Lamination) பிளாஸ்ரிக் கவரிங்களுக்கு நாடுங்கள்: கனன் போட்டோ கொப்பிங் சேவிஸ், மணல் ஒழுங்கை, தும்பளை வீதி, பருத்தித்துறை. (6245)

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெறாசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும். சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N P லோகேஸ்வரன், No 33 மூத்த விநாயகர் 1 ஆம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (6151)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

### மணப்பெண் தேவை

இந்து வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த பொறியியலாளர் வயது 38 கார்த்திகை நட்சத்திரமுடைய மணமகனுக்கு மணப்பெண் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்: வி. கமலநாதன், 48, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம். (6157)

இந்து வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த வெளிநாட்டுத் தூதரகத்தில் பணியாற்றும் ரோகிணி நட்சத்திரமுடைய 37 வயதுடைய வாலிபருக்கு ஆங்கிலத்தில் தேர்ச்சியுடைய மணப்பெண் தேவை விபரங்கட்கு: நேரில் தொடர்பு கொள்ளவும். வி. கமலநாதன், 48, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம். (6156)

### தவறிவிட்டது

செல்லையா நவரட்ணம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 483632797 V 04 - 09 - 88 அன்று நல்லூர் கோயிலில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது நல்லூர் கோயிலில் ஒப்படைக்கவும். அத்துடன் மோட்டார் சைக்கிள் பாஸ் உள்ளது (6147)

357041341 V இலக்கமுடையதிருமதிலீலாவதி ஆலாலசுந்தரம் என்பவரின்தேசிய அடையாள அட்டை 01 - 09 - 88 பெரிய கடையில் மஞ்சள் நிற பர்சோடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (6355)

பா. நகுலேஸ்வரி, குப்பிளான் வீரமனை ஆகிய எனது அடையாள அட்டை (536930197 V) குப்பிளானிற்கும் தெல்லிப்பளைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6358)

### விபத்தில் மாணவி காயம்

யாழ்ப்பாணம், செப்.7 டியூட்டறி மாணவிகள் மீது மினிவான் ஒன்று மோதியதில் மாணவி ஒருவர் பலத்த காயமடைந்தார்.

கோப்பாயைச் சேர்ந்த கிரிசாந்தி [வயது 17] என்ற மாணவியே காயம் அடைந்தவராவார்.

இருபாலைக்கு அண்மையில் இந்த விபத்து நடைபெற்றது.

காயமடைந்த மாணவி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-10)

### விசாரணை

கொழும்பு, செப் 7 கொழும்பு சட்டத்தரணி விஜேதாஸ லியனுராச்சி பொலீஸ் பாதுகாவலில் இருந்த சமயம் மரணமான சம்பவம் குறித்து, இரகசியப் பொலீஸார் ஆஸ்பத்திரி ஊழியர்கள் பலரை விசாரித்தனர். (ஓ-எ)

# நாடு நம்புவது போல் இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு நானும் உடந்தைஅல்ல

## றெனியின் சுருதி மாறுகிறது

கொழும்பு, செப்.7 நாடு நம்புவது போல் இந்திய-இலங்கை அமைதி உடன் பாட்டுக்கு நானும் உடந்தையல்ல.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய முன்னுள் நிதி அமைச்சர் றெனிடிமெல் முன்கண்டவாறு தெரிவித்தார்.

நீர்கொழும்பில் நடைபெற்ற சுதந்திரக்கட்சிப் பொதுக்கூட்டத்தில் திரு. றெனி டி மெல் பேசினுர்.

அவர் மேலும் சொன்னதாவது;

அமைதி உடன்பாடு சம்பந்தமாக இலங்கை-இந்திய அரசுகளுக்கு இடையே நடந்த பேச்சுக்களின் எந்தக் கட்டத்திலும் நான் பங்குபற்றவில்லை.

உடன்பாடு கைச்சாத்திடப்படுவதற்கு மூன்று தினங்களுக்கு முந்தியே இது விஷயம் எனக்குத் தெரியவந்தது.

உடன்பாட்டில் கைச்சாத்திடுவதற்கு பிரதமர் ராஜீவ்காந்தி கொழும்பு வந்தார். அப்போது அவருடன் செல்ல வேண்டிய அமைச்சராகஎன்னை அரசு நியமித்தது.

உடன்பாட்டுக்கு உடந்தையாக இல்லாத விடத்தில் ராஜீவுடன் செல்லும் அமைச்சராக ஏன் ஒப்புக்கொண்டேன் என்று கேட்கப்படுகின்றது.

ராஜீவை, அவர் அரசியலுக்குள் பிரவேசிக்கும் முன்னரே எனக்குத் தெரியும். ராஜீவுக்கும் எனக்கும் இடையில் உள்ள நெருங்கிய உறவு பற்றி கொழும்பு அரசுத் தலைவர்களுக்குத் தெரியும்.

அதனுல்தான் ராஜீவ் இங்கு வந்தபோது அவருடன் கூடச்செல்லும் அமைச்சராக என்னை அரசு நியமித்தது.

இதைத் தவருக நாட்டு மக்கள் புரிந்து கொண்டனர். அமைதி உடன்பாட்டுக்கு நானும் உடந்தை என்று இதை வைத்து மக்கள் நினைத்தனர். அரச உறுப்பினர் என்ற ஹோதாவில் நான் அன்று அரசுடன் அந்த நேரம் நிற்கவேண்டியதாயிற்று

இப்படி திரு. றெனி டி மெல் சொன்னுர்.

## சிறந்த சாரதிப் போட்டி

யாழ்ப்பாணம், செப்7 வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சிறந்த சாரதிப் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி அன்று நடைபெறும்

பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, மன்னுர், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய சாலைகளைச் சேர்ந்த சாரதிகள் இதில் கலந்து கொள்வர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு.எஸ். கனகரத்தினம் தலைமையில் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் சாரதிகள் பயிற்சிப் பாடசாலையில் இத்தேர்வுகள் நடைபெற உள்ளன.

செயலாற்று முகாமையாளர் திரு. எம் மயில்வாகனம், பயிற்சி அதிகாரி திரு.எம்.ஏ: சிவலோகநாதன், இளைப்பாறிய பொலீஸ் அத்தியட்சகர் திரு எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் நற்சாரதிப் தேர்வுப் போட்டியின்போது சமுகம் அளிப்பர். (இ)

## 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
13 - 7 - 1929

உதிர்வு:
29 - 9 - 1987



திரு. உ. அடைக்கலம்
(மலர்தேவி லொறி உரிமையாளர்)

அன்புடன் எம்முடன் இருந்து எம்மை விட்டுச் சென்று 2 ஆண்டுகள் ஆனுலும் உங்கள் நினைவுஎம்மை விட்டு அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றேம்

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி. பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்.

இருபாலைச்சந்தி,
கோப்பாய். (6158)

## பிரயாண ஒழுங்குகள்

குவைத் நாட்டிற்கு

கூலியாட்கள், பணிப்பெண்கள் உடனடியாகத் தேவை. முற்பணம் அறவிடப்பட மாட்டாது பாஸ்போட்டும் செய்து கொடுக்கப்படும்

உடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: **வி. க. கனகேந்திரன்,**
றெயில் றேட் (நந்தாவில் அம்மன் கோயிலடி) கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (6319)

★வியாபாரம் பெருக விளம்பரம் செய்க★

### புளொட் மறுப்பு

வவுனியா, செப்.7 அனுராதபுரம் தம்பிறிகஸ்வெவ என்ற கிராமத்தில்இடம்பெற்றகொலை, கொள்ளைகளைப் புளொட் இயக்கத்தினரே செய்தார்கள் என்று வெளியாகிய செய்தியை நாம் முற்ருக மறுக்கின்றேம்.

இதற்கும் எமக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென அதிகாரபூர்வமாகத் தெரிவித்துக் கொள்கின்றேம் என்றுபுளொட் இயக்கத்தின் வன்னிப்பிராந்திய பொறுப்பாளர் திரு. மாணிக்கதாசன் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். (ஓ-64)

### அன்பளிப்பு

லண்டன் விம்பிள்டன் கணபதி தேவஸ்தானம் துன்னலை அல்லையம்பதி ஸ்ரீமுருகன் சனசமூகநிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகக்கெனமூவாயிரத்து இருநூறு(3200/-) ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

இப்பணத்தை துன்னலை அல்லையம்பதி பாலர் பாடசாலைக்குரிய உபகரணங்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தவுள்ளதாக நிலையத் தலைவர் திரு.ச,செந்தூர்ராசா தெரிவித்துள்ளார். (ஓ-118)

### சூரன் ஜெயந்தி விழா

தேவரையாளி இந்துக் கல்லூரியின் ஸ்தாபகரும், வதிரி சைவப் பெரியாருமாகிய திரு சூரன் அவர்களின் நூறுவது ஜெயந்தி விழா அல்வாய் ஆலடி விநாயகர் ஆலய வீதியில் அண்மையில் நடைபெற்றது.

ஆசாரியார் தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு.ச.சிவகுரு (சைவம்) ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திருவாளர்கள் தெணியான் ச. பரஞ்சோதி, தி செல்வநாதன் செ. சதானந்தன், க.கமலாகரன் ஆகியோர் அமரர் சூரனின் தியாகங்கள் பற்றி சொற்பொழிவாற்றினர்.

ஈற்றில் தர்மகர்த்தா சபைச் செயலாளர் திரு. வ. க. இராசையா நன்றி கூறினுர். (இ)

### புத்தெழில் நூல் வெளியீடு

புதுவை தமிழ்ச் சங்கத்தின் மாத சஞ்சிகையான "புத்தெழில்" முதலாவது இதழ் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அச்சுவேலி குகன் இன்ஸ்ரிரியூட்டில் வெளியிடப்பட உள்ளது.

விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி கலாநிதி திரு. என். பாலகிருஷ்ணர் கலந்துகொள்வார்.

சிறப்புரை வழங்குபவர்களாக அகில இலங்கைக் கம்பன்கழகத்தைச் சேர்ந்த திரு. இ. ஜெயராஜ் கலந்து கொள்வார்.

நூலின் முதற் பிரதியை அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் பெற்றுக் கொள்வார். (இ-72)

### மீண்டும் தெரிவு

யாழ்ப்பாணம், செப்.7 வடபிரதேச மினிபஸ் சேவை சங்கங்களின்சமாஜத்தின் பொதுசனத் தொடர்பு அதிகாரியாக சமாஜத்தின் உபதலைவர் திரு.வனிதா – மகேந்திரன் மீண்டும்தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (இ)

### கோயிலுக்குப் புதிய கட்டடம்

கொடிகாமம், செப்.7 கொடிகாமம் பெரிய நாவலடி அருள் மிகு சிவகாமசுந்தரி அம்பாள் புதிய கட்டடம் ஒரளவு நிறைவேறிவருகின்றது. (இ- 75)

### பாதுகாப்பற்ற பாலம்

கொக்குவிலில் அமைந்துள்ள அம்பட்டப்பாலம் பாதசாரிகளுக்கும், சைக்கிளில் செல்வோருக்கும் அவலம் விளைவிக்கும் பாலமாக உள்ளது.

பத்தடிவரையில் ஆழமான வாய்க்காலுக்கு மேலாகக் கட்டப்பட்டுள்ள இப்பாலம் போதிய பாதுகாப்பானதாக இல்லாததால் மக்கள் இதனுள் தவறி விழவும் நேரிடுகிறது. (இ-69)

## சீரணி நாகபூஷணி தேவஸ்தானம் அறிவித்தல்

சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்திற்குரிய பரந்தன் 3-ஆம் வாய்க்காலில் உள்ள 10 ஏக்கர் முரசுமோட்டை கமம் என்னும் பெயர் கொண்ட நெற்காணியை மேற்படி தேவஸ்தானத்தின் தர்மகர்த்தா சபை அனுமதியின்றி எவரும் குத்தகைக்கு கொடுக்கவோ அல்லது ஏற்றுச் செய்யவோ கூடாது என்று இத்தால் அறிவிக்கின்றேம்.

இந்த நெற்காணி சம்பந்தமாக இதற்கு முரணுக ஏதாவது கொடுப்பனவுகள் நடந்தால் தர்மகர்த்தா சபை இதற்குப் பொறுப்பல்ல.

**தலைவர் மு. ஐயாத்துரை,**
காரியதரிசி வே. கனகசபாபதி,
தர்மகர்த்தா சபை.
சண்டிலிப்பாய். [C/126]

உ
சிவமயம்

## குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயம் பொதுக் கூட்டம்

முற்றுக தரைமட்டமாக்கப்பட்ட மேற்படி ஆலய புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க விளையும் இச் சந்தர்ப்பத்தில் ஆலய நிர்வாகம். புனரமைப்பு பற்றிய பொதுக் கூட்டம் எதிர்வரும் 10- 9- 1988 சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மேற்படி ஆலயத்தில் நடைபெறும். அம்பாள் அடியவர்கள் அனைவரையும் சமுகம் தரும்படி தயவன்புடன் வேண்டுகின்றேன்.

**குறிப்பு:**
இவ் வாலயம் சம்பந்தமாக யாதும் பிரச்சினைகள் இருப்பின் அங்கு சமுகம் தந்து தங்கள் நிலைப்பாட்டினை எடுத்துரைக்கும்படி வேண்டுகின்றேன். இக் கூட்டத்தில் மேற்கொள்ளும் முடிவுகள் இறுதியானவையாக அமையும்.

**செ, ஈஸ்வரபாலன்**
முகாமையாளர்

6- 9- 88
குரும்பசிட்டி. ( 6326 )

## சவூதி அரேபியா, குவைத் பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியாவிற்கும், குவைத்திற்கும் குறுகிய காலத்துக்குள் பிரயாணம் மேற்கொள்வதற்கு எம்மிடம் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. விரும்புவோர் உடன் Pass Port, 6 படம், அனுபவச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

### சவூதி அரேபியா

| | |
|---|---|
| Hospital Cleaners | — 350 SR+ Food & Lodging |
| Electrical Welder | — 750 SR |
| Furniture Carpenter | — 750 SR |
| Furniture Painter | — 750 SR |
| Plumber | — 700 SR |
| Civil Supervisor | — 900 SR |
| General Electrician | — 750 SR |
| A/C Technician | — 700 SR |
| Drivers | — 600 SR |

பாஸ்போட் இல்லாதோருக்கு உடன் எடுத்துக் கொடுக்கப்படும்.

### குவைத்

கிளீனேர்ஸ் —30 KD

**V. N. சிவஞானம்**
449, இராமலிங்கம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(6162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரக்கணக்கான மீனவர் கல்முனையில் பாதிப்பு

## கடல்வலயச் சட்டத்தை நீக்கக் கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

கல்முனை, செப் 7

"கல்முனையிலிருந்து இருபக்க கடல் கரையோரங்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான மீனவர்கள் தற்போது வறுமையில் வாடுகின்றனர். இவர்களின் வாழ்வு கருதி தற்போதுள்ள கடல் வலய பாதுகாப்புச் சட்டத்தை நீக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்"

கல்முனை முஸ்லிம் பொதுநலசேவைக் கழகத்தினதும், அகில இலங்கை தமிழர் முஸ்லிம் ஒற்றுமை அமைப்பினதும் பொதுச் செயலாளர் ஜனாப். எம். எச். ராஜாமுகம்மது ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மேற்படி பகுதிகளில் இரவு காலங்களில் மீன்பிடித் தொழில் செய்து தங்கள் குடும்ப ஜீவியத்தை நடத்திவந்த ஏழை மீனவக் குடும்பங்கள் கடல் வலயப் பாதுகாப்புச் சட்டத்தால் தொழில் செய்யமுடியாமல் மிகவும் வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு கஷ்டமுறும் இம் மீனவ மக்களுக்கு அரசின் நிவாரணமாகுதல் உடன் கிடைக்க வேண்டும்.

அத்துடன் மீனவர்கள் ஆழ்கடல் சென்று மீன்பிடித் தொழிலை செவ்வனே செய்வதற்கு ஏதுவாக கடல் வலய பாதுகாப்புச் சட்டத்தை நீக்க, ஆவன செய்ய வேண்டும்.

இப்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது.

(இ-84)

# சிக்கன கடன் உதவிச் சங்கம் ஆற்றும் பணி

## வருடாந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபம்

மானிப்பாய், செப், 7

ஐக்கிய நாணய சங்கங்கள் போன்றவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய ஊக்குவிப்பையும் உதவியையும் யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் உதவிச் சங்கச் சமாசம் வழங்கிவருகிறது. வெளிநாடுகள் வழங்க உள்ள கடன்களைக் கூட அசாதாரண சூழ்நிலைகளால் பாதிப்படைந்த சங்க அங்கத்தவர்களுக்கு குறைந்த வீத வட்டிக்கு கடனாக கொடுத்து உதவ சமாசம் முன்வந்துள்ளது.

யாழ் மாவட்ட சிக்கன கடனுதவிச் சங்க சமாசப் பொருளாளர் திரு. த. சிவரத்தினம் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்க வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் வருடாந்தக் கூட்டத்துக்கு திரு. இ. வல்லிபுரம் தலைமைவகித்தார்.

திரு. இ. வல்லிபுரம் கூறியதாவது;

வட மாகாணத்தில் உள்ள 13 உதவி அரசஅதிபர் பிரிவுகளிலும் மொத்தம் 359 ஐக்கிய நாணயச் சங்கங்கள் உள்ளன. இவைகளில் அநேகம் போட்டி போட்டு சமூக நன்மதிப்பை பெற்றுவருகின்றன.

எமது சங்கம் இன்று மூன்றாவது ஆண்டு வளர்ச்சியில் கால்வைத்துள்ளது. இதில் ஏழு பேர் தேசியவீடமைப்புக் கடன்களை பெற்றுள்ளனர்.

இன்னும் 5 பேருக்கு இக்கடன் வழங்கப்படவுள்ளது. இதனை விட பலர் குறுகியகாலக் கடன்களையும் சுயமுயற்சிக் கடன்களையும் பெற்றுள்ளனர்.

இப்படி அவர் கூறினார்.

புதிய தலைவராக திரு. இ. வல்லிபுரம் செயலாளராக திரு. பாலுசபாரத்தினம் பொருளாளராக செல்வி சி. நளினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. பா. சபாரத்தினம் நன்றி கூறினார்.

(இ-90)

# மானிப்பாய் மகளிர் கல்லூரி இலக்கிய நாடகப் போட்டிகள்

மானிப்பாய், செப், 7

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இல்லங்களுக்கிடையிலான இலக்கிய நாடகப் போட்டிகள் சமீபத்தில் நடைபெற்றன.

சிலப்பதிகாரத்திலிருந்து இருகாட்சிகளும் கம்பராமாயணத்திலிருந்து இரு காட்சிகளும் நாடகங்களாக மாணவிகளால் நடிக்கப்பட்டன.

இந்நாடகப் போட்டிகளின் முடிவில் இலக்குமணனைக் குணசித்திர பாத்திரமாக கொண்ட "ஏன் அழுதான்" என்ற நாடகம் முதலிடத்தை பெற்றது.

இந் நாடகத்தை கிருஷ்ண இல்லத்தைச் சேர்ந்த மாணவிகள் நடித்திக் காண்பித்தனர்.

இலக்குமணனாக நடித்த செல்வி. றெஜினா ஆண் பாத்திர நடிப்புக்கான முதலிடத்தைப் பெற்றார்.

கண்ணகியாக நடித்த செல்வி சாமுண்டீஸ்வரி பெண் பாத்திர நடிப்புக்கான முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

(இ-90)

# சென்றிகள் விஸ்தரிப்பு

சரவெட்டி, செப்.7

நெல்லியடி, திக்கம், மற்றும் நெல்லியடியை அண்டிய பகுதிகளில் இந்திய அமைதிப் படையின் சென்றிநிலைகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளைநெல்லியடி முள்ளி, உடுப்பிட்டி, மந்திகைபோன்றபகுதிகளில் பயணிகள் வாகனங்கள் நுணுக்கமாகச் சோதனையிடப்படுகின்றன.

(ஒ-70)

# மக்களுக்கு சுபீட்ச வாழ்வு வழங்கும் கூட்டுறவு இயக்கம்

## ஆண்டு நிறைவு விழாவில் உரை

பண்டத்தரிப்பு, செப் 7

கூட்டுறவுஇயக்கம்அங்கத்தவரிடையே சகோதர மனப்பான்மையையும் பொருளாதாரத்தையும் வளர்த்து மக்களுக்கு சுபீட்ச வாழ்வு வழங்க வல்லது.

வட்டுக்கோட்டை மூன்றுபனை ஐக்கிய நாணயச்சங்கத்தின் 56 ஆவது ஆண்டுநிறைவுக் கூட்டத்தில் உரையாற்றிய கூட்டுறவு அபிவிருத்திப்பரிசோதகர் திரு. சிங்காரம் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தலைவர் திரு: க. கிருஷ்ணர் தலைமையில் கூட்டம் நடந்தது.

திரு. சிங்காரம்மேலும் பேசுகையில்; இன்றைய காலகட்டத்தில் தமிழ் இனம் முன்னேற கூட்டுறவு ஒன்றே துணை செய்யக்கூடியது,

பண்டைத் தமிழர் வாழ்வு கூட்டுறவு அடிப்படையில் அமைந்தது,

விவேகமும் சுயநலமும் கலந்துதான் நாம் நலிந்தோம். இந்த உண்மையை உணர்ந்து ஐக்கிய இயக்கத்தின் இலட்சிபம், கோட்பாட்டை மதித்து அனைவரது மேம்பாட்டிற்காகவும் உழைப்பேன் என்ற உறுதிப்பாடு பூண்டுகொள்வது எமது உயர்விற்கு அத்திவாரம் என்றார்.

திரு. க கிருஷ்ணர் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

(இ120)

# கிளிநோச்சியில் தேடுதல்

யாழ்ப்பாணம், செப 7

கிளிநொச்சியில் கடந்த வாரம் பல இடங்கள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

செல்வா நகர், கரடிப்போக்கு ஆகிய பகுதிகளில் தேடுதல்கள் நடத்தப்பட்டன.

ஆண்கள் தலையாட்டிகளின் முன் கொண்டு செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

(இ-144)

# சைவ சமய எழுத்தாளர் வட்டம்

யாழ்ப்பாணம், செப். 7

சைவசமய எழுத்தாளர் வட்டம் ஒன்றை நல்லை ஆதீன குரு மஹா சந்நிதானம் தொடக்கி வைத்துள்ளார்,

இவ்வட்டத்தின் தலைவராக ஆத்ம ஜோதி நா. முத்தையாவும் செயலாளராகத் திரு. நா, கனகரத்தினமும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர், (இ)

# வீடமைப்பு கடன் 'சேவன' விடம்

கொழும்பு, செப் 7

உணவுமுத்திரைபெறுள்ளோரின் வீடமைப்புக் கடன்களை சேவன நிதியம் பொறுப்பேற்றுள்ளது.

இதற்கான உத்தரவைப் பிரதமர் பிறப்பித்திருக்கிறார்.

இந்தக் கடன்கள் 10 லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் பெரும் பாலும் உணவு முத்திரை பெற்றுள்ளவர்களுக்கே கிடைத்திருக்கின்றன,

இனி அவர்கள் அக் கடனைச் செலுத்தத் தேவையில்லை.

(இ-எ)

# தீரா நோய் தீர்த்தருளும் தீன தயாளன் முருகன்

தீராநோய் தீர்த்தருளுகின்ற தீனதயாளன் முருகன்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நடைபெற்றுவரும் தொடர் சொற்பொழிவின் போது ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

"நோயும் மருந்தும்" என்ற பொருளில் உரையாற்றியபோது அவர் மேலும்கூறியதாவது;

"நாமோ மனையாள் மக்கள் என்றும் மனதில் பற்றை வளர்த்துக் கொண்டு திண்டாடுகிறோம். மனைவி, மக்கள், செல்வம் என்பவற்றினால் துன்புறுகின்றோம். இந்த நிலை இறைவனை எண்ணுதவர்களிடம் இருப்பது வியப்பன்று, நோயுள்ளவர்கள் மருந்து உண்ணுமல் நோய்க்குக் காரணமான உணவுகளை உண்டு வாழ்ந்தால் அவர்களிடமிருந்து நோய் அகலாமல் இருப்பது இயல்பே. அது மேலும் வளரும், மருந்து உண்பவனுக்குத்தான் நோய் தீரும்.

சிறந்த மருத்துவரிடம் மருந்து உண்ணத் தொடங்கிய நோயாளிக்கு நோய்நீங்கி உடனே சுகம் உண்டாக வேண்டும் என்ற ஆசை இருக்கும், வைத்தியரிடம் தான் ஒருவாரமாக மருந்து சாப்பிடுவதாக [illegible] மருந்தையே சாப்பிடுவதாகவும் [illegible] த்தைக் காணவில்லையே என்றும் குறைகூறுகின்றான்.

"சுவாமி! அஞ்ஞானம் என்னும் நோயினால் சம்சார பந்தத்தில் அகப்பட்டுத் தத்தளிக்கிறேன். இன்னது செய்வது என்று தெரியாமல் தயங்குகிறேன், தடுமாறுகின்றேன். இதைச் செய்தால் என்னென்று எதையோ செய்து மயங்கி நிற்கிறேன். அஞ்ஞானத்திற்கு மாற்று ஞானம் என்பது அறிந்தேன். அந்த ஞானத்தை வழங்கும் மருத்துவன் நீ. பண்டிதன் நீ என்பதை உணர்ந்தேன். நீ ஞானபண்டிதசுவாமி அல்லவா? உன்னிடம் ஞானமே உருவாகிய கதிர்வேல் இருப்பதைத் தெரிந்து கொண்டேன். அதை உட்கொண்டால் உள்ளத்திலே உருவேற்றித் தியானித்தால் உள்ளத்தை மூடியிருக்கும் அறியாமை என்ற இருள் நீங்கும் என்பதை அறிந்து தீராநோய் தீர்த்தருளுகின்ற தீனதயாளன் முருகன் என உணர்கின்றேன்.

அவருக்குக் கதிர்வேல் என்னும் ஞானமருந்தின் சிறப்புத் தெரியும். அது பாவங்களை எல்லாம் கணநேரத்தில் ஓடிவிடும்படி செய்யும், என்ன பாவமோ மனையோடு தியங்கும் நிலை வந்திருக்கிறது. அந்தப் பாவத்தைப் போக்கும் மருந்து கதிர்வேல். வினை ஓடவிடும் கதிர்வேல்."

இவ்வாறு அவர் கூறினார்.

சஞ்சீவி பொது அறிவுப் போட்டி
இல - 11
பரிசு பெற்றவர்கள் விவரம்
முதலாம் பரிசு:
மா. சுகிர்தா,
60, மணல்தறை லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
இரண்டாம் பரிசு:
கு. காத்யாயினி,
37/2, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
மூன்றும் பரிசு:
வின்செனட் டலிமா,
'லிற்றில் புளவர்' கிழக்குத் தெரு,
ஊர்காவற்றுறை.

# வைத்திய சேவை மீண்டும் ஆரம்பம்

தாளையடி, செப் 7

வடமராட்சி கிழக்கில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினரின் வைத்திய சேவைகள்மீண்டும்ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையின் ஒருபகுதியில் சேவையாற்றிய இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் சில வாரங்களுக்கு முன்னர் திரும்பிச் சென்றிருந்தனர்.

செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் மீண்டும் திரும்பியுள்ள போதிலும் நடமாடும் வைத்திய சேவைகள் நடைபெறவில்லை. (ஒ-சி 144)

# திருமலையில் செஞ்சிலுவைச் சங்கக் கிளை

திருகோணமலை, செப் 7

திருகோணமலையில் புதிதாக செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

முதல் உதவியாக இந்திய செஞ்சிலுவைச் சங்கம், திருமலைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 4 தொன் சீனி, பருப்பு போன்ற உணவுப் பண்டங்களை வழங்கியுள்ளது.

இந்த உணவுப் பண்டங்களை கடந்த முதலாம் திகதி திரியாய கிராமத்திற்கு எடுத்துச் சென்று அங்குள்ள அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினர் வழங்கினர். (ஒ-150)

# மட்டுவிலில் வயிற்றோட்டம்

சாவகச்சேரி, செப். 7

மட்டுவில் பகுதிகளில் சிறுபிள்ளைகளுக்கு வயிற்றோட்ட நோய் காணப்படுகிறது.

வயிற்றோட்டத்துக்கு ஏழு வயதுச் சிறுமி ஒருவர் பலியாகி உள்ளார்.

# பதவி உயர்வு

பச்சிலைப்பள்ளி, செப். 7

கிளிநொச்சி மாவட்ட மேலதிக உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக கடமையாற்றிய திரு. ம. வாரித்தம்பி வவுனியா மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

NEW MASTER INSTITUTE
1st Lane, Power House Road, JAFFNA.
89 DAY CLASSES
கலை, வர்த்தகம்
ஆரம்பம்: 12-09-88 திங்கள் காலை 7-30 மணி

| | | |
|---|---|---|
| Economics | — 7-30 | திரு. சின்னத்தம்பி |
| Accounts | — 8-30 | திரு. ராஜன் |
| Commerce | — 9-30 | திரு. தேவா |
| Logic | — 10-30 | திரு. சந்திரராஜா |
| Accounts | — 11-30—2-30 (Monday) | திரு. யோகராஜா |

(C-1/3)

+
யே. ம. கு. துணை
★ திருமணம் ★
அன்புடையீர்!
நிகழும் விபவ வருடம் ஆவணித்திங்கள் 25ஆம் நாள் (10-9-88) சனிக்கிழமை காலை 11-00 மணி முதல் 12-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன் **மில்ரன் மகேந்திரன்** அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி **மாலின் ஜெயந்தி** அவர்களுக்கும்

108, RUE BLOMET,
PARIS-15, FRANCE.
இறைவன் இயேசுவின் துணைகொண்டு மெய்விவாகம் பாரிஸில் உள்ள அர்ச். லம்பேட் தேவாலயத்தில் நடைபெறுமென்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.
இங்ஙனம்
திரு. திருமதி மரியாம்பிள்ளை ஊறாவில், காங்கேசன்துறை.
திரு. திருமதி அன்ரனிப்பிள்ளை "ஹாட்ஸ் வாசா" பெரியபுலம் வீதி, நாரந்தனை, ஊர்காவற்றுறை.
(6312)

IMMEDIATE VACANCIES IN SAUDI ARABIA

1. CIVIL ENGINEER — 10 Years Experience Salary SR 2000 — SR 2500
2. MECHANICAL — B.Sc. + 10 Years Experience Salary — 2000 SR — SR 2500
3. ELECTRONIC ELECTRICAL — B. Sc. + 10 Years Experience — Salary — SR 2000 — SR 2500
4. ELECTRONIC TECHNICIAN — Diploma + 5Years Experience — Salary SR 750 — SR 900
5. ELECTRICAL TECHINICIAN — Diploma+5 Years Experience Salary SR 750 — SR 900
6. TELEPHONE TECHNICAN — Diploma + 5 Years Experience — Salary SR 700 — SR 850
7. HEAVY EQUIPMENT MECHANIC — 7 Years Experience — Salary SR 750 — SR 900
8. AIR CONDITION TECHNICIAN (WINDOW/CENTRAL TYPE) — SR 700 — SR 800
9. PLUMPER 5 Years Experience and English Speaking Salary SR 600 — SR 700
10. CRANE MECHANIC 5 Years Experience English Speaking Salary SR 750 — SR 900
11. AIRCON PRESSER MECHANIC — 5 Years Experience English Speaking Salary SR 750 — SR 900
12. DIESEL / PETROL MECHANIC — 5 Years Experience English Speaking Salary SR 650 — SR 800
13. BOILER TECHNICIAN 5 Years Experience English Speaking Salary SR 650 — SR 750
14. MARINE ENGINEER 5 Years Experience Salary Negotiable
15. DOCTOR M.B.B.S — 5 Years Experience Salary Negotiable
16. LEATH OPERATER 5 Years Experience Salary Negotiable
17. AGRICULTURE ENGINEER 5 Years Experience Salary Negotiable
18. CLEANERS (AIRPORT) Salary SR 500
19. CLEANERS (HOSPITAL) FEMALES Salary SR 400 30 — 44 Years SR 400
20. MASON 5 Years Experience
21. CARPENTER 5 Years Experience

Age 21 — 45 Years

22 TAILOR (Male) — 5 Years Experience with Cutter Salary 700 SR

KUWAIT
1. DRIVER (With Gulf Licences) — Salary 50 KD
2. CLEANERS — Salary 30 KD

T. V. Travels & Tourist
Kokuvil Station (Front)
Brown Road,
KOKUVIL.
(C-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் மூவர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, செப் 7

மட்டக்களப்பு நகர சுற்றுடலில் மூவர் அவர்களது வீடுகளில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

இச்சம்பவம் சடந்த இரா இறுதியில் நடைபெற்றது.

சி. பரமானந்தசிவம் (25) புன்னைச்சோலை, ஞா. அரியநாதன் (22) மாமாங்கக் கொலனி, செ. இலங்கேஸ்வரன் (20) மாமாங்கக் கொலனி ஆகியோரே அந்த மூவருமாவர்.

(ஒ-21)


## பிரயாண ஒழுங்குகள்

### சவூதியில் வேலைவாய்ப்பு

1. ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
2. யூனிவசிற்றி கிளீனேர்ஸ்
3. மெயின்ரனன்ஸ் கிளீனேர்ஸ்
4. எலெக்ரீஷியன்ஸ்
5. மெக்கானிக்
6. குழாய் வேலை செய்பவர்
7. மேசன்
8. தச்சுவேலை செய்பவர்
9. றைவேர்ஸ் (Drivers)
10. எலக்ரோனிக் மெக்கானிக்
11. ரெலிபோன் டெக்னீசியன்ஸ்

முற்பணம் அறவிடப்படமாட்டாது

பிரயாணம் செய்யக் கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டுத் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

## கோல்டன்

### ரவல்ஸ் & ரூர்ஸ்

புகையிரதநிலைய வீதி,
சுன்னுகம்.

கிளை 1. குப்பிளான்
கிளை 2. வன்னிச்சி கோவிலடி.

(C/49)


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வயிரவப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
பெரியவர் (வயது 103)

தோற்றம்: 1884- 08- 10 மறைவு: 1987- 09- 07

திதி: 1988- 09- 07

யாழ்ப்பாணம்- மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சடைச்சப்பையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தெல்லிப்பளை- பன்னாலை வாசரும் நூறு கோடைகண்டு நிறை வாழ்வு பெற்றவர்.

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தந்தையே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு என்றும் அகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
''ஆனந்த இல்லம்''
பன்னாலை,
தெல்லிப்பளை. (6280)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரி தண்ணீர் இன்றிப் பாதிப்பு

## 2 வார்ட்டுகள் மூடப்பட்டன

வட்டக்கச்சி, செப் 7

கிளிநொச்சி அரச மருத்துவமனையில் கடந்த 3 மாத காலமாக தண்ணீர் பிரச்சினை நிலவுகிறது. இந்த நிலையில் தற்போது 1 ஆம், 2 ஆம் வார்ட்டுகள் மூடப்பட்டு விட்டன.

கடும் வரட்சி காரணமாகவே தண்ணீர்ப் பிரச்சினை அங்கு ஏற்பட்டுள்ளது.

மருத்துவமனையில் இரண்டு கிணறுகள் இருந்தும் அவற்றில் தண்ணீர்வற்றிவிட்டது.

இதனால் அவசர நோயாளர்களை மட்டும் தான் வார்ட்டில அனுமதிக்கிறார்கள்.

வைத்திய அதிகாரியிடம் இதுபற்றிக் கேட்டபோது, தண்ணீர் அற்ற நிலை நீடிக்குமானால் மருத்துவமனையையே மூடும் நிலை ஏற்படலாம் என்றார்.

தொற்று நோய்கள் அதிகமாகப் பரவும் ஆபத்து உருவாகி வருகிறது.

எத்தனையோ பொது ஸ்தாபனங்களுக்கு அறிவித்தும் எந்தவித பலனும் இல்லை. தற்போது இராணுவத்தினர் ஒரு வாரத்துக்கு ஒரு முறை பவுசரில் தண்ணீர் தருகிறார்கள். இந்தத் தண்ணீர் 1 மணி நேரத்துக்கும் போதாது.

இப்படி அவர் கூறினார். (இ-ரி)

# யாழ் மாநகரசபை

## சனசமூக நிலையங்களின் சமாச விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப் 7

யாழ்ப்பாணம் மாநகர சபை சன சமூக நிலையங்களின் சமாசம் உதைபந்தாட்டம், கிரிக்கெட், கரபந்தாட்டம், தாச்சி ஆகிய போட்டிகளை சமீபத்தில் நடத்தியது.

போட்டி முடிவுகள் வருமாறு:-

28-08-1988 நடைபெற்ற 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்ட முடிவுகள்:

1. நாவாந்துறை சென் நீக்கிலஸ் சன சமூக நிலைய 'பீ'' அணி 5- 0 கோல்களால் குருநகர் றெக்கிள மேசன் சன சமூக நிலையத்தை தோற்கடித்தது.

2. குருநகர் சன சமூக நிலைய ''ஏ'' 2. 1 கோல்களால் கிறீன்பீல்ட் சன சமூக நிலையத்தை தோற்கடித்தது.

24-08-1988 நடைபெற்ற 6 பேர் கொண்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டம், அரை இறுதி ஆட்ட முடிவுகள்:

1 றெக்கிளமேசன் சன சமூக நிலையம் 2- 0 கோல்களால் கொய்யாத் தாட்டம் சன சமூக நிலையத்தை தோற்கடித்தது.

2. கலாஜோதி சன சமூக நிலையம்2- 0 கோல்களால் சென்றேக் சன சமூக நிலையத்தை தோற்கடித்தது.

3. அரியாலை சன சமூக நிலையம் 2- 0 கோல்களால் பாசையூர் புனித அந்தோணியார் சன சமூக நிலையத்தை தோற்கடித்தது.

4. அரியாலை சன சமூக நிலையம் 2- 0 என்ற கோல்களால் பாசையூர் மக்கள் முன்னேற்ற சங்க சன சமூக நிலையத்தை தோற்கடித்தது.

25-08-1988 நடைபெற்ற 6 பேர் கொண்ட சரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முடிவுகள் அரை இறுதி ஆட்டம்.

1. தட்டாத்தெரு கலாஜோதி சன சமூக நிலையம் 2- 0 கோல்களால் குருநகர் சன சமூக நிலையத்தை தோற்கடித்தது.

2. அரியாலை சன சமூக நிலையம் (பி) 2- 1 கோல்களால் அரியாலை சன சமூக நிலையத்தை (ஏ) தோற்கடித்தது.

(இ)

## காயமுற்றனர்

பூநகரி, செப். 7

வன்னேரிக்குளம் குடியேற்றத் திட்டத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் பலர் காயமுற்றனர்.

அவர்களில் சமாதான நீதிவான் ச. பொன்னுச்சாமி, கூட்டுறவுச் சங்க முகாமையாளர் திரு. சுந்தரலிங்கம், மக்கள் கடை முகாமையாளர் ஆ. துரைராசசிங்கம் ஆகியோரும் அடங்குவர்.

## பத்து லட்சம் பகிர்ந்தளிப்பு

கொழும்பு, செ. 7

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 18இல் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதல் தொடர்பான பிரதான சந்தேக நபராகக் கருதப்பட்ட அஜித் குமாராவைக் கைது செய்ததற்காக மூன்று கான்ஸ்டபிள்களுக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறது.

இதனிடையில் இச் சன்மானத்தைப் பெற மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பொலீஸ் அதிகாரி ஒருவரை, பொலீஸ் மா அதிபர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்திருக்கிறார். (ஒ- எ)


வேலணை ப. நோ. கூ. சங்கம்
வரைவுள்ளது

## கேள்வி அறிவித்தல்

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலக மேல்மாடிக் கட்டிட அமைப்பு வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப் பெற்ற கேள்விகள் 1988ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி வரை சங்கப் பொது முகாமையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் யாவும் அரசாங்கத்தில் ரூபா 500000/-க்கு மேற்பட்ட கட்டிட அமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்குப் பதிவு செய்யப் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விகள் யாவும் மீளளிக்கப்படக் கூடிய கேள்விப் பிணைப் பணமாக ரூபா 10000/- உம் மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 100/- உம் செலுத்தி சங்கத்தினுல் வழங்கப்படும் கேள்விப் படிவங்களின் இணைப் பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை சங்க அலுவலக நேரத்தில் சங்கத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்

வேலணை ப. நோ. கூ. சங்கம்,
வேலணை.
05-09-88 (C/123)



## POLY

K. K. S. ROAD,
TELLIPPALAI.

தூய / பிரயோக கணிதம்

திரு. கிருஷ்ணா

ஆரம்பம்: 8.9.88 (வியாழன்)

90 A/L — வியாழன் 3.00 மணி
89 A/L — வியாழன் 4.00 மணி

தாவரவியல்

திரு. செல்வநேசன்

90 A/L — ஆரம்பம்:
10. 9. 88 (சனி) மாலை 5.00 மணி

89 A/L ஏனைய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

90 A/L ஏனைய வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்.


## மிருதங்க பரீட்சையில் விசேஷசித்தி



யாழ்ப்பாணம், செப 7

வட இலங்கை சங்கீத சபையினரின் ஆசிரியர் தரத்துக்கான மிருதங்கப் பரீட்சையில் செல்வன் க. கண்ணதாசன் விசேஷ சித்தி பெற்றுள்ளார்.

யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் திரு. எம். சிதம்பரநாதன் (சங்கீத ரத்தினம்) அவர்களிடம் பயின்று, பின் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழக இசைத்துறையில் ஏ. எஸ். இராமநாதன் (சங்கீத பூஷணம்) அவர்களிடமும் பயின்றவர்.

இவர் பிரபல சமயச் சொற்பொழிவாளர் திரு. கு. கணேசசுந்தரனின் மகனாவார்.

(இ)


### வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language

பயிற்சிக் காலம்: 40 நாள் (திங். புதன், வெள்ளி)

ஆரம்பம்: 12.09.88

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய் முறைப் பயிற்சி Amstaed, EG 2000, Commodore, Laser ஆகிய சம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

விண்ணப்ப முடிவு நாள்: 10.09.88

Computer Programming in Cobol Language

பயிற்சிக் காலம்: 3 மாதம் (சனி, ஞாயிறு வகுப்புகள்)
செய்முறை பயிற்சி ARC (IBM Compatable) கம்பியூட்டரில் வழங்கப்படும்

## UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (உப தபாற்கந்தோர் அருகாமை)

(C/37)



## 'M' THREE TRAVELS

### பெருமையுடன் வழங்கும் உடனடி வேலைவாய்ப்புக்கள்

★ சவூதி அரேபியா

சவூதி அரேபியாவுக்கு கடவுச்சீட்டுத் தந்தவர்களில் அனேகரின் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டு அவர்கள் பயணம் செய்து விட்டனர். கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு கடவுச்சீட்டுத் தருபவர்களின் பயண ஒழுங்குகள் விரைவில் செய்து கொடுக்கப்படும்.

(1) கனரக வாகன சாரதிகள்
(2) காப்பென்ரர் (தச்சு வேலையாட்கள்)
(3) மேசன்
(4) துறைமுக சுத்திகரிப்பாளர் (கிளீனேர்ஸ்)
(5) கேற்றறிங் கிளீனேர்ஸ் (சமையல் அறைக்கிளீனேர்ஸ்)

★ ஜெமன்

சவூதி அரேபியாவிற்கு அண்மித்த புதிய நாடான ஜெமன் நாட்டுக்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு. அதி விரைவில் பயண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

1. காப்பென்ரர் (தச்சு வேலையாட்கள்)
2. மேசன்
3. ரீல் (F) விற்றர்ஸ் (கம்பி கட்டுபவர்கள்)
4. (B) பாபென்ரர்ஸ் (கம்பி வளைப்பவர்கள்)
5. பிளம்பர்ஸ் (குழாய் வேலை செய்பவர்கள்)
6. ரைல் வி(F)ற்றர்ஸ் (மாபிள் பதிப்பவர்கள்)
7. வெல்டர் (ஒட்டு தொழிலாளர்கள்)

● வெளிநாட்டுப் பயணம் என்றதும் உங்கள் நினைவில் ஒலிக்க வேண்டிய பெயர்

"M" THREE TRAVEL

★ நம்பிக்கை நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

## 'M' THREE TRAVEL

தலைமைக் காரியாலயம்:
த. இந்திரநாதன்
'M' Three Travel
சற்குணவாசா
சோதிவீதி,
K. K. S.

கிளை நிறுவனம்:
இல.1, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/110)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

கல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

**பொருள்:**

பொருள் இல்லாதவரை (வேறு நன்மை உடையவராக இருந்தாலும்) எல்லாரும் இகழ்வர்; செல்வரை (வேறு நன்மை இல்லாவிட்டாலும்) எல்லாரும் சிறப்புச் செய்வர்.

**உதயன்**

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

07-09-1988 த. பெ. இல 23

# இரத்த தானமும் முரண்பட்ட சமூக நிலையும்

வட பகுதியின் மிகப்பிரதான ஆஸ்பத்திரியாக விளங்குவது யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலை. மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்தும், நாளாந்தம் நோயாளர்கள் தீவிர, அவசர சிகிச்சைகளுக்காக இங்கு வருகின்றனர். அப்பகுதிகளில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இருந்தும் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

சுமார் இருபது லட்சம் மக்களுக்கு உடல், உயிர்ச் சிகிச்சை அளிக்கும் முக்கியத்துவமும், பிரதானமும் வாய்ந்த இந்த ஆஸ்பத்திரியில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது சர்வ சாதாரணமாகி விட்டது.

இரத்தத்தைச் சேகரித்து வைக்கக்கூடிய நவீன வசதிகள் போதாது என்று இருந்த நிலைமை மாறி, வேண்டிய வசதிகள் செய்யப்பட்ட பின்னரும் ஆகக்கூடியது ஒரு நாளுக்குப் போதுமான இரத்தத்தை மட்டுமே வங்கியில் வைத்திருக்க முடிகின்றது என்று தகவல் தெரிவிக்கப்படுகிறது. இது பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

நவீன விஞ்ஞான உலகிலும் கூட, செயற்கையாக உருவாக்க முடியாமல் விடுபட்டு நிற்பவற்றுள் உயிரும், இரத்தமும் அடங்குகின்றன. உயிரைக் காப்பாற்ற ஆஸ்பத்திரிகளில் அடிக்கடி தேவைப்படுவது இரத்தம். அதனால் தான் அதனை எந்நேரமும் எடுத்துக் கொள்ளக் கூடியதாக சேமித்து வைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

அதுவும் இன்றைய தமிழர் நிலையில், அரசியல் இல்லாத இராணுவச் சூழ்நிலையில் திடீர் திடீர் என ஏற்படும் வன்செயல்களால் பொதுமக்கள் அவசியமற்ற விதத்தில் உயிராபத்தை எதிர்நோக்கி வாழ்கிறார்கள்.

எந்தநேரம் என்ன சம்பவம் நடக்கும் என்று தெரியாது. யாருக்கு எப்போது உயிராபத்து வரும் என்று சொல்லமுடியாது. எத்தனைபேர் எவ்வேளையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவார்கள் என்பதும் தெரியாது.

இத்தகைய சூழ்நிலையில் ஆஸ்பத்திரி இரத்த வங்கி நிரம்பி இருக்க வேண்டும். ஆனால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு.

இரத்தம் வழங்குவதால், மற்றவர்களுக்காகத் தானம் செய்வதால் தேகசுகம் கெட்டுவிடும். தமக்கு நோய் வந்துவிடும் என்று எம்மில் பலரும் தவறாகக் கருதுகின்றார்கள். படித்தவர்கள்கூட அப்படியே நினைக்கின்றார்கள்.

ஏன்? தமது தாய் தந்தையருக்கு இரத்தம் தேவைப்பட்டாலும் பணம் கொடுத்து வாங்கச் செய்கிறார்கள். அதனால் இரத்தமும் ஒரு வர்த்தகப் பொருள் ஆக்கப்பட்டு விட்ட கேவலநிலை உண்டாகி இருக்கிறது. இதற்காக ஒரு தரகர் கூட்டமும் செயற்படுகிறது. வெட்கப்பட வேண்டியது. பணத்துக்காக அடிக்கடி இரத்தம் கொடுப்பவர்கள் மூலம் மஞ்சள்காமாலை, எய்ட்ஸ் போன்ற நோய்கள் பரவுவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒருவரின் உடல் நிலையைச் சோதித்து, அவர் இரத்த தானம் செய்வதால் அவருக்குக் கெடுதல் எதுவும் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டுதான் இரத்தம் எடுக்க வைத்தியர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால்...

உறவினருக்காக, நண்பருக்காக, இனத்துக்காக, இலட்சியத்துக்காக உயிரும் கொடுக்கத் தயங்கமாட்டோம் என்று முழங்கும் எம்மவர்கள், இரத்ததானம் செய்யப் பின்நிற்கிறார்கள்! உயிர் கொடுப்பதற்குத் தியாக சிந்தை வேண்டும். ஆனால் இரத்த தானம் செய்வதற்கு இரக்க சிந்தை இருந்தால் போதும்.

தானங்கள் எல்லாவற்றிலும் உயிர்த் தானம் தான் சிறந்ததாக விளங்க முடியும். ஆனால் அப்படி ஒரு சாத்தியம் இல்லை. உயிர்த் தியாகம் மட்டுமே செய்யமுடியும். ஆகையால் தானங்களில் முதன்மை பெறுவது இரத்ததானம்.

கொண்ட இலட்சியத்துக்காக உயிரை அர்ப்பணிக்கும் தியாகச் செம்மல்கள் வாழும் இந்த மண்ணில் மற்றவர் உயிர் காக்க இரத்ததானம் செய்யத் தயங்குவோரும் உள்ளனரே என்ற முரண்பட்ட சமூக நிலை வியப்புக்கும் அதேவேளை கவலைக்கும் உரியதாகிறது. அது ஆழ்ந்து ஆராயப்பட வேண்டிய ஒன்று என்றே சொல்லலாம்.

# ஆப்கன் கெரில்லாக்களுக்கு தொடர்ந்து! அமெரிக்கா ஆயுத உதவி

## சோவியத் அரசு குற்றச்சாட்டு

மாஸ்கோ, செப் 6

ஆப்கன் கெரில்லாக்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆயுதங்களை வழங்கிவருவதாக சோவியத் யூனியன் குற்றஞ் சாட்டியது.

ஜெனிவா உடன்பாட்டை அமெரிக்காவும் பாகிஸ்தானும் அப்பட்டமாக மீறி வருவதாக சோவியத்யூனியன் அரசு மேலும் தெரிவித்துள்ளது.

ஜெனிவா உடன்பாடு பற்றி மீளாய்வு செய்ய அமெரிக்கா பகிஸ்தான் ஆப்கனிஸ்தான், சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு ஒன்றை நடத்தும் படி ஐ. நாவுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஆதரிப்பதாக மாஸ்கோ அரசு அறிவித்தது

ஐ. நாவுக்கு இந்த வேண்டுகோளை காபூல் அரசு விடுத்திருந்தது

இதனிடையில் ஆப்கன் அரசு யுத்தவிமானங்கள் பாகிஸ்தான் பிரதேசத்துக்குள் 14 மைல் ஊடுருவிச் சென்று கிராமம் ஒன்றின் மீது 5 குண்டுகளை வீசின என்று இஸ்லாமபாத் அரசு தெரிவித்தது.

ஆப்கன் அகதிமுகாம் அருகில் இக் குண்டுத் தாக்குதல் நடந்தது. ஒருவர் உயிரிழந்தார்; 6 பேர் காயமடைந்தனர். அனைவரும் பாகிஸ்தானியர் என்றும் அறிவிக்கப்பட்டது. (எ)

### உணவு சேமிப்பு அழிந்தது!

டாக்கா, செப். 5

பெருவெள்ளத்தின் காரணமாக பங்களாதேஷின் உணவு சேமிப்பு அழிந்து விட்டதாக டாக்கா அரசு அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க 3 கோடி தொன் உணவு தேவைப்படுவதாக அறிவித்துள்ளது. (எ)

# பலஸ்தீன அலுவலகம் தொடர்ந்து இயங்கும்

## அமெரிக்க அரசு அனுமதி

வாஷிங்டன் செப்,, 6

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் வாஷிங்டன் அலுவலகத்தை மூடுவது என்ற முடிவை அமெரிக்க அரசு கைவிட்டது.

இந்த அலுவலகத்தை மூடும்படி அமெரிக்க அரசு பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

இதை எதிர்த்து மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தை மூடும் உத்தரவு சர்வதேச சட்டத்துக்கு முரணானது என்று மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அத்தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீடு செய்வது இல்லை என்று அமெரிக்க நீதி அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

இதே வேளை பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தகவல் நிலையத்தை வாஷிங்டனில் மீண்டும் திறக்க அனுமதிப்பது இல்லை என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. (எ)

# சென்னையில் 'ரோபோ' இயந்திரமனிதன்

சென்னை, செப். 6

சென்னையில் ரோபோ இயந்திர மனிதனை நிறுவனம் ஒன்று அறிமுகப் படுத்தி உள்ளது.

தேனாம்பேட்டை சிக்னல் அருகே உள்ளது 'அஸ்வினி ஓட்டோ கார் வாஷ்' நிலயம்.

இந்த நிறுவனமே கார்களைச் சுத்தம்செய்ய இயந்திர மனிதனை (ரோபோ) அறிமுகப் படுத்தி உள்ளது.

இந்த ரோபோ, காரின் கீழ்ப் பகுதிகளை முதலில் கழுவுகிறது. பிறகு, பிளாட் போன்ற ஒரு திடல் மீது நின்று காரை மெழுகு பொலீஷ் செய்கிறது

3½ நிமிடங்களில் இவை அனைத்தையும் முடித்து விடுகிறது.

பின்னர் 7 நிமிடங்களில காரை காயவைத்து. காருக்குள் கிளீன் செய்து, வாசனை திரவியம் தெளிக்கிறது, அதன் பிறகு என்ஜின் ஒயில் பட்டரி, ரேடியேட்டர் ஆகியவற்றை சரி பார்க்கிறது. (எ)

**ஜெனிவா உடன்பாடு:**

# நான்கு நாடுகள் மாநாட்டைக் கூட்டுக; ஆப்கன் அரசு ஐ. நாவுக்கு கோரிக்கை!

ஜெனிவா உடன்பாடு பற்றி மீளாய்வு செய்ய நான்கு நாடுகள் மாநாட்டை உடனடியாகக் கூட்டும்படி ஆப்கனிஸ்தான் ஐ நாவைக் கேட்டுள்ளது.

ஆப்கன் வெளியுறவு அமைச்சர் அப்துல் வாக்கில் ஐ நாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

அமெரிக்கா, சோவியத் யூனியன். ஆப்கனிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இம் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார். (எ)

# மேற்கு சஹாரா பிரச்சினை; ஐ. நா. திட்டம் ஏற்கப்பட்டது

ஜெனிவா. செப் 6

மேற்கு சஹாராவில் கடந்த 12 ஆண்டுகளாக நடந்துவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து ஐ. நா சமர்ப்பித்த சமரசத்திட்டத்தை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டு விட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

யுத்த நிறுத்தம்; அதைத் தொடர்ந்து மொராக்கோவுடன் சேருவதா? அல்லது தனி நாடு அமைப்பதா? என்பதை அறிந்து கொள்ள மேற்கு சஹாராவில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது என்று ஐ நா. பொதுச் செயலாளர் சமர்ப்பித்த சமரசத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

மேற்கு சஹாராவில் தனிநாடு அமைக்கக் கோரி பொலீஸாரியோ முன்னணி கடந்த 12 ஆண்டுகளாகக் கிளர்ச்சியில் ஈடுபட்டு வந்தது. (எ)

**வெளி உலகில்**

**நெடுஞ்செழியன் பேச்சு:**

# ஜெயலலிதாவின் 'விக்'கே உதிர்ந்த ரோமத்தினால் ஆனது

கோவை, செப் 6

கோவையில் அ.தி.மு.க. நாவலர் அணியின் கூட்டம் நடந்தது.

நெடுஞ்செழியன் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் சொன்னதாவது;

'தம்பி வா' தலைமை ஏற்க வா. நீ ஆணையிடு நான் கட்டுப்படுகிறேன்' என்று அண்ணாவால் அழைக்கப்பட்ட என்னைப் பார்த்து 'உதிர்ந்த ரோமம்' என்று கூறினால் ஜெயலலிதா எவ்வளவு இழிந்தவர் என்பது தெரியவில்லையா?

திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள சாமிக்கே 'சவுரிராஜப் பெருமாள்' என்று பெயர் வைத்துள்ளனர்.

சவிரி என்றால் மயிர். இந்த மயிர் என்ன லேசானதா? 'விக்'கே செய்ய இந்த மயிர் தானே பயன்படுகிறது

இந்த அம்மா வைத்திருக்கும் 'விக்'கே உதிர்ந்த மயிர்தானே. அதன் விலை 5 ஆயிரம் ரூபா இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

1984-87 ஆண்டுவரை 97 லட்சம் ரூபாவுக்கு ரோமம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் 'விக்' செய்ய நம்நாட்டு ரோமம் தான் அதிகமாகப்பயன் படுகிறது.

இப்படி நெடுஞ்செழியன் சொன்னார். (எ)

**யாழ். பல்கலைக்கழக**

# இடைத்தவணைப் பரீட்சை 28 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

## மாணவர் கோரிக்கையை அடுத்து

யாழ்ப்பாணம் செப். 7

இவ்வருட கல்வி ஆண்டுக்கான இடைத் தவணைப் பரீட்சை யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களின் கோரிக்கைக்கு இணங்க இம் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

இப் பரீட்சை இம் மாதம் 19 ஆம் திகதி நடைபெற இருந்தது.

பரீட்சைக்கு ஒத்துழைப்பு நல்குவதாகவும் அதனை 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கும் படியும் கோரி யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் விஞ்ஞானபீட பீடாதிபதிக்கு மகஜர் சமர்ப்பித்திருந்தது. (இ)

### ஒரு மாணவன் மட்டுமே சித்தி

யாழ்ப்பாணம், செப் 7

அண்மையில் வெளிவந்த 5 ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் உசன் கொத்தணிப் பிரிவில் உள்ள பத்துப் பாடசாலைகளிலும் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஒரு மாணவன் மட்டுமே சித்தி அடைந்துள்ளார்.

எழுதுமட்டுவாள் வடக்கைச் சேர்ந்த செல்வன் கனகலிங்கம் சசிகுமார் என்பவரே இந்த மாணவர் ஆவார்.

### மாவட்ட நீதிபதி பதவி உயர்வு

யாழ்ப்பாணம் செப் 6

யாழ். மாவட்ட நீதிபதி திரு. வி பி சுந்தரலிங்கம் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் முதலாவது தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் பதவி உயர்வு அமுலுக்கு வந்துள்ளது.

திரு. சுந்தரலிங்கம் கொழும்பு உட்படப் பல இடங்களில் நீதிபதியாகவும், பின்னர் திருகோணமலை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை உட்படப் பல இடங்களில் மாவட்ட நீதிபதியாகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### வண ஜெஹான் திஸ்ஸநாயக்க ஞாபக ஆராதனை

யாழ்ப்பாணம். செப் 7

கடந்த வருடம் செப்டம்பர் 7 ஆம் திகதி உடுவிலில் வைத்து இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட போதகர்-ஜெஹான் திஸநாயக்க, சகோதரர் உபாலி குணதிலக, டொன் பொஸ்கோ இராசசேகர், வில்லியம் ஜெபரத்தினம் ஆகியோரை நினைவுகூரும் ஆராதனை இன்று 7 ஆம் திகதி மாலை 4 மணிக்கு மானிப்பாய் அசெம்பிளி ஒவ் கோட் வில்லியம் மேதர் ஆலயத்தில் [illegible] தலைமையில் நடைபெறும். (இ)

# காசோலை மாற்றுவதற்கு கடைகளின் படிகளில் ஏறி இறங்கும் ஊழியர்கள்

## வங்கிகள் முற்றாக மூடப்பட்டதால் வவுனியாவில் ஏராளமானோர் பாதிப்பு

வவுனியா, செப்.7

விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாக சீர்குலைப்பு நடவடிக்கை காரணமாக திங்கள் வெள்ளி தவிர்ந்த மூன்று நாட்கள் மட்டும்மவ ரத்தில் இயங்கி வந்த வவுனியா நகர வங்கிகள் இந்தியப் படையினரின் உத்தரவை அடுத்து முழுமையாக மூடப்பட்டதால் ஆசிரியர்கள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பென்ஷன்காரர்கள் உட்பட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காசோலைகளை மாற்ற முடியாமல் கடைகளின் வாசல்படிகளில் இவர்கள் ஏறிஇறங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வங்கிக்கிளைகள் இயங்கினால் வாரத்தில் 5தினங்களும் இயங்கவேண்டும் அல்லது முழுமையாக இயங்கக்கூடாது என்றுதெரிவித்து கடந்த பல நாட்களாக வங்கிகளில் நடைபெற்றுவந்த உள்ளக வேலைகளுக்கும் இந்தியப் படையினர் தடை விதித்துள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி வங்கிகளுக்குச் சென்ற படையினர் வங்கி ஊழியர்கள் அனைவரையும் ஐந்து நிமிட நேரத்தில் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டு வங்கிகளை இழுத்துமூட வைத்தனர்

மூன்று வாரங்களாக வங்கிகள் இயங்காததன் காரணமாக சுமார் 250 ஓய்வூதியம் பெறுவோர் வெகுவாகப் பாதிக்கப் பட்டார்கள். பென்ஷன் கிடைக்காததன் காரணமாக வீட்டுச் செலவுக்கு வழியின்றி இந்த வயோதிபர்கள் தவிக்கின்றார்கள்.

வவுனியா வங்கிக்கிளைகளில் உள்ள வங்கிக் கணக்கிற்கு ஏற்பவே ஆசிரியர்கள், அரசஊழியர்கள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் அனைவருக்கும் சம்பளமாகக் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்காசோலைகளை வவுனியா தவிர்ந்த வேறு எங்கும் மாற்ற முடியாத நிலை நிலவுகின்றது.

வர்த்தகர்கள், விவசாயிகள், வங்கிகளில் முடங்கியுள்ள பணத்தைப் பெறுவதற்கான வழியேதுமின்றி செய்வதறியாமல் திகைப் படைந்துள்ளார்கள்.

மேலும் வர்த்தகர்களைப் பொறுத்தமட்டில், வங்கிகள் இயங்காததன் காரணமாக அவர்களின் பணப்புழக்கம் வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளன. (இ-164)

# உண்ணாவிரதத்தை ஆதரித்து ஈழவர் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம் செப் 7

நீராத்துயரில் தமிழினம் மூழ்கியுள்ள இவ்வேளையில 'அமைதி' ஒப்பந்தம் ஓர் ஆண்டைப் பூர்த்தி செய்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மிகச்சிறிய அம்சமானவைகளான, விடுதலை இன்னமும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. கைதிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் பல.

ஈழவர் முன்னணி விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்வேளையில் அவர்கள் சிறைக்குள் வகைத் [illegible] பல சாத்வீக போராட்டங்களை நடத்திவந்துள்ளனர்.

தற்போது உண்ணாவிரதம் அனுஷ்டித்து வரும் அவர்களின் நியாமான கோரிக்கையை வெளிக் கொண்டு வர, அமைதிவழியாக நடைபெறும் அனைத்துப் போராட்டங்களுக்கும் குறிப்பாக வீரமாகாளி அம்மன் கோயிலடியில் நடைபெறும் சுழற்சி முறை உண்ணாவிரதத்திற்கு எமது ஆதரவைத் தெரிவிப்பதோடு அனைத்துப்பொது மக்களும் இதற்கு ஆதரவுவழங்குமாறுகேட்டுக் கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

### வேலன் விரைந்து வருகின்றான்!

குறிஞ்சிக் கிழவன் நல்லையிலே
அழகுப் பவனி வருகின்றான்
உரிமைக் காப்புப் போராடி
உதயம் தரவே வருகின்றான்!

நாளும் உயிர்கள் மாள்வதனை
நாதன் முருகன் அறிந்துவிட்டான்
வேலும் மயிலும் துணையாக
வேலன் விரைந்து வருகின்றான்!

அலையாய்த் தொடரும் தொல்லைகளை
அருளால் களைய வருகின்றான்
தொலைவைத் தடுத்து திவ்வியமாய்
தீர்ப்பு மொழிய வருகின்றான்!

குய்யம் செறிந்த மானுடத்தின்
குமுறல் கேட்க வருகின்றான்
துய்ய உள்ளத் துதிகேட்டு
துரிசை அகற்ற வருகின்றான்!

- செல்வி அகிலா குணராஜா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகளை
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# உதயன்

07 - 09 - 1988 புதன்கிழமை



அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகடிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள


## முதலில் யுத்த.....

(1-ம்பக்கத் தொடர்ச்சி) விஷயங்கள் பற்றி எல்லாம் திரு. டிக்ஸிற் சொன்னார்.

கூட்டணியின் சார்பில் நாம் ஒரு விஷயத்தை திரு. டிக்ஸிற்றிடம் வலியுறுத்தினோம்.

யுத்த நிறுத்தத்தை முதலில் பிரகடனப்படுத்தி அமைதியை உடனே ஏற்படுத்த வேண்டும். அதன் பின்னர்தான் தேர்தல் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று நாம் அவரிடம் வலியுறுத்திச் சொன்னோம். தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இன்னொரு யுத்த நிறுத்தத்தை கொண்டு வரவேண்டும் என்று திரு. டிக்ஸிற்றைக் கேட்டுக்கொண்டோம்.

திரு. ஜெயவர்த்தனதான் வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் அக்கறை காட்டுகிறார்.

### இந்தியா எதிர்பார்ப்பது

★ வடக்கு - கிழக்கு இணைப்புப் பிரகடனம்-

★ தமிழ் மொழி உத்தியோக மொழிச் சட்ட அமுல்.

★ அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

வடக்கு- கிழக்கு மாகாணசபைத்தேர்தல் பற்றிய அறிவிப்பை வெளியிடும் முன்னர், இந்த மூன்று விஷயங்களையும் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன அறிவிக்கவேண்டும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

இப்போது எல்லாமே திரு. ஜெயவர்த்தனவின் கைகளில்தான் உள்ளன.

### கொழும்பு வந்த நோக்கம்

கேள்வி:— நீங்கள் கொழும்பு வந்த நோக்கம் என்ன?

அமிர்:— வடக்கு-கிழக்கு நிலைமை பற்றியும் தேர்தல் நடத்தும் சூழ்நிலை இல்லை என்பது பற்றியும் நான் வெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவுக்கு சென்னையிலிருந்து தொலைபேசியில் எடுத்துச் சொன்னேன். கொழும்பு சென்று திரு. டிக்ஸிற்றுடன் இதுபற்றி பேசித்தீர்க்கும்படி திரு. நரசிம்மராவ் சொன்னார். அதைத் தொடர்ந்தே நாம் இங்கு வந்தோம்.

கேள்வி:— வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது பற்றி ஆராய்வதும் உங்கள் விஜயத்தின் நோக்கமா?

அமிர்:— இல்லவே இல்லை! முதலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதி திரும்ப வேண்டும். அதற்கு முதலில் யுத்த நிறுத்தம் தேவை. தமிழரின் நீண்டகால நன்மையைக்கருதி இது குறித்து ஆராய்ந்து உதவவே நாம் வந்திருக்கின்றோம்.

கேள்வி:— ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசும் எண்ணம் உண்டா?

அமிர்:— இல்லை.

கேள்வி:— கொழும்பில் எவ்வளவு காலம் தங்கியிருப்பீர்கள்?

அமிர்:— சில காலம் நாம் இங்கு இருப்போம். அடிக்கடி இந்தியத் தூதர் டிக்ஸிற்றைச் சந்தித்துப் பேசவிருக்கிறோம். (அ-எ-3)


### தேவை

எமது தொற்சாலைக்கு 5 தொன் எள் ஙுப்பிண்ணாக்கு தேவை. வழங்கக் கூடியவர்கள் விலையைக் குறிப்பிட்டு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.

யாழ் மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.



### தவறிவிட்டது

OOAAB 5999 இலக்க ஏசியா (Asia) சைக்கிள் கலட்டி அம்மன் வீதியில் கிராம சேவகர் அலுவலகத்தில் 5-9-88 அன்று காலை தவறுதலாக மாறி எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. அங்கு 99 G 1092 இல RALIEH (றலி) சைக்கிள் உள்ளது மாறி எடுத்து சென்றவர் எனது முகவரியில் தொடர்பு கொண்டு மாற்றிச் செல்லவும்.

அம்பாள் விடியோ சென்ரர்
894, கே. கே. எஸ். வீதி,
(6160) நாச்சிமார் கோவிலடி.



## யாழ் -கொழும்பு



விமானசேவை

8-9-88 பகல் 12-00 மணிக்கு புறப்படும் விமானத்தில் சில வெற்று ஆசனங்கள் உண்டு.

உடனடியாக
தொடர்பு கொள்ளவும்

Mack Travels
(Pvt) Ltd,.
JAFFNA.


## நகரில்,, .

(1-ம்பக்கத் தொடர்ச்சி) அருகில் பதற்றம் நிலவியதாயினும் வேறு அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை.

குண்டுச்சத்தம் கேட்டபோதிலும் அமைதிப் படை வாகனம் அங்கு நிற்காமலேயே சென்றுவிட்டதாம். பின்னர் நண்பகல் ஒரு மணியளவில் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்த அமைதிப்படையினர் அயலில் இருந்த பலரை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

தீவிர விசாரணையின் பின் பலர் விடுவிக்கப்பட்டனராயினும் அப்பகுதி சைக்கிள் கடை உரிமையாளர் ஒருவர் விடுவிக்கப்படவில்லை. (ஓ-10-9)

## பூஸா...

(1-ம்பக்கத் தொடர்ச்சி) க்கு சேட், சாரம், சவர்க்காரம், பற்பசை, முகப்பவுடர், ஆகியவற்றுடன் மருந்த வகைகள் மிகவும் தட்டுப்பாடாக இருக்கின்றன- என்றார். (ஓ-10)

## ரயில் நிலைய.,..,

(1ம் பக்கத் தொடர்ச்சி) வைத்து விட்டுச் சென்றார்.

அந்தப் பார்சலில் குண்டு வைக்கப்பட்டிக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் ஹோட்டல் மனேஜர் அதைத் தூக்கி வெளியே எறிய எத்தனித்தார்.

அப்போது பார்சலில் இருந்த குண்டு வெடித்தது.

-இப்படி பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்தார். (ஓ-எ)

## பிரதமர்....,

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி) பார்க்கத்தின் கீழ் இல்லை.

எனவே இத்தடை உத்தரவு இந்திய விமான சங்கம், டில்லி விமானச் சங்கம் போன்ற பயிற்சி அமைப்புக்களைச் சேர்ந்த விமானங்கள் அந்த வழியால் செல்வதைத் தடைசெய்யும். (ஓ-எ)

## நாவலர் முகாமில் பெயர்களைப் பதிய வேண்டும்

யாழ்ப்பாணம், செப் 7

இந்தியாவில் இருந்து வந்த அகதிகள் யாழ் நகரைச் சேர்ந்த (பதிவுடைய) மக்கள் ஆகியோரைத் தவிர்ந்த பிற பகுதிகளைச் சேர்ந்த ஏனைய சகலரும் தமது பெயர்களைப், நாவலர் கலாசார மண்டபத்தில் உள்ள இந்திய அமைதிப்படை முகாமில் பதியவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக நாவலர் கலாசார மண்டப முகாம் பொறுப்பதிகாரி விடுத்த பத்திரிகைக் குறிப்பில்—

பின்வரும் வீதிகளுக்குள் அடங்கும் இடங்களில் வசிப்பவர்கள் இம்மாதம் பத்தாம் 10 ஆம் திகதிக்கு முன்னர் முகாமுக்குச்சென்று பதிவுசெய்ய வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது:-

கனகரத்தினம் வீதி, புவனேஸ்வரி அம்பாள் வீதிச் சந்தி, வைமன் வீதி, புதுச் செட்டித் தெரு, அம்மன் வீதி, பலாலி வீதிச் சந்தி, சுபாஸ் ஹோட்டல் ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்டம்சந்தி, ஆஸ்பத்திரி வீதிச்சந்தி, புங்கங்குளம்சந்தி, மாம்பழம் சந்தி. (அ-10)

## நிர்ணய...

(1-ம்பக்கத் தொடர்ச்சி) குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எரிபொருள் பாவனையாளர்கள் அவற்றுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிர்ணயித்த விலைகளுக்கே வாங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எரிபொருள் விற்கும் விற்பனையாளர்கள், விலைப்பட்டியலை தத்தமது ஸ்தாபனங்கள் முன் பாவனையாளர் பார்வைக்கு வைக்க வேண்டும.

நிர்ணயிக்கப்பட்ட விலை விபரம் வருமாறு:

பெற்றோல் 1 லீற்றர் 13 ரூ. 50 சதம்

டீசல் - 1 லீற். 8 ரூ 62 சதம்

மண்ணெண்ணை 1லீற். 7 ரூ. 06 சதம்

மேற்கண்ட விலைகளில் எரிபொருள் பெறுவதில் பாவனையாளர்களுக்கு கஷ்டம் எதுவும் இருந்தால் முறைப்பாட்டுப் புத்தகங்களில் பதிவு செய்யலாம் அல்லது யாழ் நகர கொமாண்டன அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்கலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது (அ-10)

## படையினர்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி) பிரதிகள் ஆந்திர முதலமைச்சர் திரு. என். ரி. ராமராவ், கலைஞர் மு. கருணாநிதி ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஓ-ஐ-107)

## சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், செப். 7

காரைநகரில் நேற்று நபர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

காரைநகர் கருங்காலியில் வைத்து முருகன் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார். (ஓ-10)


## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு சிவபாதசுந்தரம்

(இளைப்பாறிய மலேரியா நோய்த்தடுப்பு உத்தியோகத்தர் - அளவெட்டி)

கார்த்திகேசு சிவபாதசுந்தரம் 4-9-88 அன்று அகாலமரணமானார். இவர் திலகவதியின் அன்புக் கணவரும், சிவநேசன், மாலா, கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்கு 5-9-88 திங்கட்கிழமை தையிட்டியில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி, தகவல்:
தையிட்டி, மனைவி
காங்கேசன்துறை. (6328)

### செல்வி கிரிஷாந்தி இராஜலிங்கம்

செல்வி கிரிஷாந்தி இராஜலிங்கம் (க. பொ. த. உ/த) மாணவி வேம்படி மகளிர் கல்லூரி, இருபாலைஎக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்) 5-9-1988ல் அகாலமரணமடைந்தார். இவர் Dr. சிற்றம்பலம் இராஜலிங்கம் (பொறுப்பதிகாரி, அரசினர் வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு), விஜயலக்சுமி (இளைப்பாறியNursing Officer) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், மகிந்தன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ரூபதர்சினி (வேம்படி மகளிர் கல்லூரி), காண்டீபன் (இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-9-88 செவ்வாய் மாலை கோப்பாயில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராம்பற்றை,
கோப்பாய் வடக்கு. (6166)

### திருமதி பாக்கியவதி சேனாதிராஜா

ராஜ - விலா, மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி பாக்கியவதி சேனாதிராஜா 06-09-88 இல் காலமானார். அன்னார் திரு. தம்பர் சேனாதிரஜா (இளைப்பாறிய நீதிமன்ற பதிவாளர்)வின் அன்பு மனைவியும், சுபத்திராதேவி (ஆசிரியை, இராமநாதன் கல்லூரி), நாகேந்திரன் (C.E.B.), இராஜராஜேஸ்வரி, இரங்கநாயகி, ரமணி, ஜெயந்தி(மேற்கு ஜேர்மனி), வசந்தி (மேற்கு ஜேர்மனி)ஆகியோரின் அன்புத் தாயாரும், விவேகானந்தன் (யாழ் விவசாய இலாகா), கந்தசாமி (கிராமசேவை அலுவலர் - அளவெட்டி), வள்ளிநாயகி, நற்குணம் (உரிமையாளர் நந்தி - வவுனியா), செல்வராஜா (சவுதி), ஸ்ரீஸ்கந்தராசா (மேற்கு ஜேர்மனி), நித்தியானந்தன் (மேற்கு ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், மல்லாகம் உப தபால் கந்தோர் முன்னாள் அதிபர் தியாகராஜாவின் அன்புச் சகோதரியும், சுதாகரன், விவேகா, ரவிசங்கர் (பிரான்ஸ்), உமாசங்கர், ஜீவசங்கர், அனுஷியா, அகல்யா, ராகுலன், கோகுலன், மாதங்கி, கஜனன், மயூரன், ஆரூரன், செந்தூரன் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று 7-9-88) பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் வ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தகவல்: ந. சேனாதிராஜா.
''ராஜ - வில்லா''
மல்லாகம். (6327)

### திருமதி நல்லம்மா அரியகுட்டி

புன்னாலைக்கட்டுவன் வடக்கு காலஞ்சென்ற அ. அரியகுட்டி (ஓய்வுபெற்ற சிறாப்பர் யாழ் மாநகரசபை) அவர்களின் மனைவி நல்லம்மா காலமாகிவிட்டார். இவர் செல்லம்மா, அரியரத்தினம், பாக்கியம், சோமாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவரத்தினம் (சட்டத்தரணி) கலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 07-9-88 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் யாழ்ப்பாணம் இல 40, மூன்றாம் குறுக்குத் தெரு இல்லத்தில் நடைபெற்று வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

40, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (6331)



லீலா பேக் ஹவுஸ் சண்டிலிப்பாய் சீரணி கிளை நிறுவனத்தின்

★ முதலாவது ஆண்டு நிறைவு ★

AUM
LEELAA BAKE HOUSE
லீலா பேக் ஹவுஸ்

7.9.88 இன்று முதல் 2ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் எங்கள் கிளை நிறுவனம் வழமை போல் எங்கள் அன்புமிகு வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், கடமை உணர்வு மிக்க ஊழியர்கள் மற்றும் அனைவரது ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடிநிற்கின்றது.

மாக்கற் சதுக்கம் சீரணி
சங்கானை சண்டிலிப்பாய்

தரமான உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு தாரீர்! (C/127)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 07 - 09 - 1988 அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Wednesday 7th September 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org